
# 3. இயற்கை வளங்கள்



வகுப்பறையில் பொம்மலாட்டம் தொடங்கியது. எல்லா மாணவர்களும் ஆர்வத்தோடு அமர்ந்திருந்தனர்.




வணக்கம்! நான் தான் கல்லாலான கல்வராயன் பேசுகிறேன். மலைகள் மற்றும் குன்றுகளிலுள்ள பாறைகளிலிருந்து உருவானேன். நான் மக்களுக்குக் கிரானைட், நிலக்கரி, சுண்ணாம்புக்கல் போன்று பயன்பாட்டுப் பொருளாவேன். மேலும், நான் மக்களுக்கு வீடு கட்டவும், சாலை அமைக்கவும், அணைகள் கட்டவும் எனப் பல்வேறு வகைகளில் பயன்படுகிறேன்.



வணக்கம்! நான்தான் மண்ணாலான **மாதவன்**... கல்வராயன் சிதைந்து நான் உருவானேன். நான் பாறைகள் உரசியதாலும், சிதைந்ததாலும் சிறு சிறு துகள்களாகி உருவானேன்.

இப்படி மண்ணாகிய என்னைச் சரளை மண், மணல், களிமண், வண்டல்மண், கரிசல்மண், செம்மண் என்று பலவகையாகக் கூறுவார்கள். நான் வேளாண்மை செய்ய, மண்பாண்டம் செய்யப் பயன்படுவேன்.



வந்தேன் அய்யா! வந்தேன் அய்யா! **உலோகநாதன்** வந்தேனய்யா! என்னைப் பூமியிலிருந்து வெட்டிப் பிரித்து எடுப்பார்கள். நான் கடினமாகவும் பளபளப்பாகவும் இருப்பேன்.

என்னில் இரும்பு, தங்கம், வெள்ளி, அலுமினியம் போன்ற பலவகை உண்டு. என்னை அணிகலன்களாகவும் வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்களாகவும் செய்யப் பயன்படுத்துகிறார்கள்.



வணக்கம்! நான் தான்
மரத்தாலான மரகதம்
வந்திருக்கிறேன்! பூமியில் நான்
எல்லா இடங்களிலும் இருப்பேன்.
பூமியில் என்னைச் சார்ந்து
உயிரினங்கள் வாழ்கின்றன.

உயிரினங்களுக்கு உணவாகவும்,
உறைவிடமாகவும், உடையாகவும்
பயன்படுகிறேன்.

"மாணவர்களே! உங்களிடம் ஒரு வேண்டுகோள்! மனிதர்களாகிய நீங்கள் மரங்களை வெட்டி அழிப்பதால் மழை வளம் குறையும். அதோடு எதிர் காலத்தில் நீரில்லாமல் இந்தப் பூமி பொட்டல்காடாய் வறண்டு விடும்" என்று மனமுடைந்து கண்ணீரோடு விடைபெற்றாள் மரகதம்.





மேற்கண்ட படத்தில்

- மரத்தால் ஆன பொருள்களுக்கு மஞ்சள் வண்ணமிடு.
- உலோகத்தால் ஆன பொருள்களுக்குச் சிவப்பு வண்ணமிடு.
- கல்லால் ஆன பொருள்களுக்குக் கருப்பு வண்ணமிடு.
- களிமண்ணால் ஆன பொருள்களுக்குப் பழுப்பு வண்ணமிடு.


## வகைப்படுத்துவோமா ?




| மரத்தால் ஆன பொருள்கள் | களிமண்ணால் ஆன பொருள்கள் | உலோகத்தால் ஆன பொருள்கள் | கல்லால் ஆன பொருள்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

கீழே கொடுக்கப்பட்டுள்ள பொம்மைகள் எதனால் செய்யப்பட்டுள்ளது என்று எழுதுங்களேன்!

















கீழே கொடுக்கப்பட்டுள்ள பொம்மைகள் எதனால் செய்யப்பட்டுள்ளது என்று எழுதுங்களேன்!













## கடற்கரைக்குப் போவோமா ?



கடற்கரைக் காட்சியைப் பாருங்கள்.

**என்னென்ன காட்சிகளைக் காண்கிறீர்கள் ?**

| | |
|---|---|
| ______________________ | ______________________ |
| ______________________ | ______________________ |
| ______________________ | ______________________ |

> கடற்கரை என்பது நீண்ட மணல்வெளிப் பகுதியாகும்.
> இங்குள்ள மணல் சிறுசிறு துகள்களால் ஆனவை.

- கடற்கரை மணல் வேளாண்மை செய்ய ஏற்றதன்று.
- கடற்கரை மணல் கட்டடம் கட்டவும் பயன்படாது.

## வயல்வெளிக்குப் போவோமா ?



வயல்வெளியைப் பாருங்கள்.
அங்கு நடக்கும் நிகழ்ச்சிகள் என்னென்ன ?


- வயல் வெளியில் மண் உள்ளது.
- மண் வேளாண்மைக்கு உகந்தது.
- மண்ணுடன் நீர் சேரும்போது அது சேறாக மாறுகிறது.
- சேற்று மண்ணில் நாற்று நட்டு வேளாண்மை செய்யப்படுகிறது.



சேற்றை வேறு எங்கெல்லாம் பார்த்திருக்கிறீர்கள் ?

சூழ்நிலையியல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பார்த்து, மணல் உள்ள பகுதியை **1** எனவும், சேறு உள்ள பகுதியை **2** எனவும் குறிக்கவும்.









**உங்களுக்குத் தெரியுமா ?**

உயர்ந்த மலைப் பகுதிகளில் கோடைக்காலத்திலும் வெப்பம் குறைவாகக் காணப்படுவது ஏன் ?

